485

ௐ

கடவுள் துணை

கோயில் எதற்கு?

பண்டித

மாளவியாவின்

ஆஸ்திகப் பேருரை

இஃது

ஆஸ்தீக சங்கத் தலைவர்
உயர் திருவாளர்:
சதாவதானர்-தே. கிருஷ்ணசாமிப்
பாவலர், அவர்களை
ஆசிரியராகக் கொண்டு
சென்னைமாநகரத்தில் நடைபெறும்
"தேசபந்து" வாரப்பத்திரிகையில்
நாரதர் எழுதியது.

3 JUL 19

ஸ்ரீ சாது
இரத்தின சற்குரு புத்தகசாலை,
பார்க்டவுன்போஸ்ட், சென்னை.

SRI SADHU
RATNA SARGURU BOOK DEPOT,
PARK TOWN POST, MADRAS.

Q2
N29
85685

மிக அருமையான வசன புத்தகம்!

வாசிப்போர் ஆத்மஞான மார்க்கத்தை மிகச் சுலபமாய் அறியலாம்.

சொற்பப் பிரதிகள் கையிருப்பு!

முந்தி வாங்குவோர் அதிருஷ்டசாலிகள்.

ஒவ்வொரு குடும்பத்திலும் அவசிய மிருக்கவேண்டிய

ஸ்ரீ விவேகாநந்தரது குருநாதர்

ஸ்ரீ பகவான் ராமகிருஷ்ண பரமஹம்ச தேவர்

திருவாய் மலர்ந்தருளிய

ப்ரஹ்மாநந்த சம்பாஷணைகள்

496-பக்கம் கொண்ட அழகான காலிகோ பயிண்டு செய்தது

பிரதி 1-க்கு ரூ. 3—0—0. (தபாற்கூலி வேறு)

பிரிய சகோதரர்களே! உலகத்திலே ஜீவராசிகள் அஞ்ஞானத்தின் மூழ்கி, பாசபந்தத்துக் குடன்பட்டு, ஜனன மரண துக்கத்தில் அமிழ்ந்து, வெளியேற முடியாமல் பரதவிக்கும் இக்காலத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் என்னும் மஹா தீரபுருஷன் தோன்றி, கர்மயோகம்-பக்தியோகம்-ஞானயோகம் முதலிய சாஸ்திரங்களின் அந்தர்க்கதமான விஷயங்களைப் போதித்துள்ளார் என்பது உலகறிந்த விஷயம். அவ்வகையான நூல்களுள் மேற் குறித்த "ப்ரஹ்மாநந்த சம்பாஷணைகள்" என்னும் நூலும் ஒன்று. இது தமது அந்தரங்க சிஷ்யர்களுடனும், ஆத்மார்த்த நண்பர்களுடனும் சுகதுக்க சமயங்களிலெல்லாம் சாதாரணமாகப் பேசிவந்த சம்பாஷணைகளாகும். இவற்றை அவரோடு பழகிய சிஷ்யர்கள் குறிப்பு எடுத்து அக்காலத்திய பத்திரிகைகளில் பிரசுரம் செய்தார்கள்.

மேனாட்டுப் பழக்க வழக்கங்களில் நமது சகோதர சகோதரிகள் ஆழ்ந்து கண்டதே காக்ஷி கொண்டதே கோலமென ஆர்ப்பாட்டம் செய்யும் இக்காலத்தில் இந்த நூல் தமிழ் உலகுக்கு உபயோகமாகும் பொருட்டுத் தேசபக்தி காரணமாக மூன்று முறை சிறைவாசம் பெற்ற ஸ்ரீயுத சுப்ரமண்யசிவம் அவர்கள் சுத்தமான எளிய செந்தமிழில் மொழிபெயர்த்துத்தர நாங்கள் வெளியிட்டிருக்கின்றோம். எங்கள் உத்தேசப்படி புத்தகம் அநேகமாகச் செலவழிந்து கையிருப்பில் மிகச் சொற்பமே யிருக்கிறதாதலால், நண்பர்கள் சீக்கிரம் பெற ...டுவது அவசியம். இதனால் தமிழ்நாடு ஆத்மசுகம்பெற்று ப்ரம்...நந்த சொரூபமாய் விளங்குமாறு, அண்ட சராசரங்களுக் கிறைவியும் நமது பரமஹம்சரது பிரத்தியக்ஷ உபாசனா மூர்த்தியுமாக விளங்கும் இறைவி மஹாகாளி அநுக்கிரகிப்பாராக.

ஸ்ரீ சாது இரத்தின சற்குரு புத்தகசாலை, 3, பார்க்டவுன், சென்னை.

உ

கடவுள்துணை

கோயில் எதற்கு?

ஆஸ்தீக சங்கத்தலைவர் உயர்திருவாளர் சதாவதானம்-
தே. கிருஷ்ணசாமிப் பாவலர் அவர்களை ஆசிரியரா
கக்கொண்டு சென்னைமா நகரத்தில்
நடைபெறும் தேசபந்து வாரப்பத்திரிகையில்
(23-3-29) நாரதர் எழுதுகிறார்.

வாரும் நாரதரே! காசி சென்றீரே? என்ன விசேஷம்? சௌக்கியமா?

என்னப்பா! உன் கேள்விகள் தலை கீழாக இருக்கின்றனவே? இதிலும் சீர்திருத்தம் போலும்! என் நண்பர் ஒருவர் தன் நண்பரைப் பார்க்கச் சென்றார். அவர் இவரை எங்கே வந்தாய்? என்று கேட்டார்? ஒன்று மில்லை-...... என்று பதில் சொல்ல ஆரம்பித்தார். இதைக் கண்டதும் துரை வீட்டு......கு வருவது போலக் கோபம் வந்தது. 'ஒன்று மில்லையே? ஏன் வந்தாய்? போ! போ! போ! உன் இந்தியப் புத்தியையா காட்டுகிறாய்?' என்று உறுமினார். என் நண்பர் சாது. அதற்காகப் பேசத்தெரியாதென்று நினைக்கவேண்டாம்.

"இந்தியனுக்கு இந்திய புத்திதான்; தாங்கள் வெள்ளையனுக்குப் பிறந்தவரோ?" என்று ஒரு சவக்கடி கொடுத்து வெளியில் வந்தார்.

எப்பொழுது பார்த்தாலும் உனக்கு ஒரு கதை எ. இவர் முணுமுணுக்கிறார். நான் என்ன செய்வது? பழைய காலத்து மனுஷ்யன். அதிருக்கட்டும். உன் கேள்விக்

குப் பதில் சொல்லுகிறேன். அப்பனே! காசி போய் வந்தவரைக் கண்டாலும் பிணி தீரும். பாபம், சோம்பல், நோய் என்றழைக்கப்படும் சகல பிணிகளும் தீரும். பகீரதன் தன் முன்னோரைக் கரையேற்ற எவ்வளவோ ஆண்டு கடுந்தவமியற்றிக் கொணர்ந்த கங்காதேவி ஆநந்தமாய் ஓடும் காசிமாநகரில் ஒரு நாளிருக்கவும் ஒரு கோடி ஜன்மம் எடுத்துத் தவமியற்றி யிருக்கவேண்டும். தானும் பூலோகத்திற்கு வருவதா என்று இறுமாப்புடன் அண்டசராசரங்களையு மழித்துவிடுவதென்ற உறுதியுடன் ஓடிவர, தன் ஜடையாகிற புல்லின் நுனியில் பனித்திவலை போல் பார்வதீ நாயகன் செய்ய, அந்தோ! எவ்வளவோ ஆண்டு தவமியற்றிக் கொணர்ந்த கங்கையைக் காணோமே என்று [illegible]கைத்துத் திரும்ப, கைலாயநாதனைக் கண்டு களிகூர்ந்து ப[illegible]ண்டு பாடித் துதித்து வந்தான் பகீரதன். அங்கு ஒரு மு[illegible]வர் மூக்கைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார். தான் வரும்பொழுது இந்த வீங்கல் பீத்தக் குடிசையில் என்ன தைரியமாய் உட்கார்ந்துகொண்டிருக்கிறது? என்று கோபாவேசத்துடன் அகம்பாவம் நிறைந்த அம்மன் ஒருதரம் முட்டிக்கொண்டும் அது ப[illegible]டைய நெடுநாள் தவசில் ஆறிவிட்டதால், குடிசையுடன் நிர்ப்பயமாய் உருட்டிக் கொண்டுபோக ஆரம்பித்தாள். கண்ணை விழித்துப் பார்த்தார் ஜஹ்னு; (அந்த முனிவர் பெயர்;) ஞானதிருஷ்டியில் பார்த்தார். கங்கையின் இறுமாப்பை யடக்க நினைத்தார். அகஸ்திய மாமுனிவருடைய ஜாதியிற் பிறந்தோன் என்று அதனிடம் கூறினார். நூலியற்றவில்லை. பருத்தி நூலல்ல. புத்தகம். இலக்கணம் எழுதவில்லை. விந்திய மலையின் தலையைப் பிடித்து மகாவிஷ்ணு: பலியை அழுத்தியது போல் அழுத்திப் பாதலத்தில் அழுத்தியது போல் அழு[illegible]வில்லை. பின் என்ன? அகஸ்தியர் ஆகாயத்திற்

85685

கும் பூமிக்குமாக கட்டை விரலளவு பெரியமனிதர்-சமுத்திர ராஜன் இவரைக் கண்டதும் கேலியாகச் சிரித்தான். அச்யுதாயநம: என்றார். சமுத்திரம் இருந்தவிடம் தெரியவில்லை. பாவம்! அந்த சமாசாரம் கங்கைக்குத் தெரியாது. பீமசேனன் நஹுஷன் வயிற்றில் என்னடா? வழியைக் காணோம். இந்த வீட்டிற்கு ஜன்னலே இல்லையே! பட்டிக்காட்டான் கட்டிய வீடாயிருக்கிறதே என்று ஆலோசனை செய்ததுபோலக் கங்கை செய்தாள். பகீரதன் திரும்பிப் பார்த்தான். 'ஹோ' என்ற சப்தத்துடன் ஆகாசத்திற்கும் பூமிக்குமாக மலைகளையும், காடுகளையும், யானைகளையும், யானைபோன்ற முதலைகளையும் அடித்துக்கொண்டு பின்னோடு ஓடிவந்த ஸுரநதியைக் காணோம். திகைத்தான், அழுதான், புரண்டான். 'ஆண்டாண்டுதோறும் அழுது புரண்டாலு மாண்டார் வருவரோ? அங்கு ஒரு எலும்புக் கூடு, வெள்ளியால் பண்ணிய தாடியை உருவிக் கொண்டு உட்கார்ந்திருந்தது. கிட்ட நெருங்கினான். அது உயிருள்ள ஒரு முனி. புன்னகை பூத்த மதிவதனத்தைக் கண்டான். பாத சாலங்களில் விழுந்தான். தன் வரலாற்றைத் தெரிவித்து அநுக்கிரகம் செய்யும்படி பலவாறு வேண்டினான். பிறகு முனிவர் மனமிரங்கிக் காதுவழியாக ஓடிப்போ என்று அதட்டினார். இவ்வளவு பிரயத்தினம் செய்து கொண்டுவந்த கங்கை அவனுடைய முன்னோரை மாத்திரமல்ல, எல்லா மாந்தரையும் கரையேற்றத் தயாராய் இன்று மங்கு ஓடிக்கொண்டிருக்கிறது. அதனால்தான் பகீரதப் பிரயத்தினம் என்று சொல்லப்படுகிறது. தானெடுத்த காரியத்தை முடித்துத் தீரவேண்டும் என்ற ஒரே எண்ணமுள்ள பகீரதன் எவ்வளவோ இடையூறு வந்தும் பயந்தானில்லை. இது திருவள்ளுவருக்கும் தெரியும். ஆகையாற்றான் கூறுகிறார்.

" எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கு "

அந்தக் கங்கைக் கரையில் பெரியோர்கள் தவம் செய்வதும் எம்பெருமான் எழுந்தருளி யிருப்பதும், பக்த கோடிகள் அவரைச் சேவிப்பதும், ஆயிரங் கண்ணிருந்து பார்க்க வேண்டும். உடனே இந்திரனை இரவல் கேட்கலாம் என்று எண்ணினேன்...

ஓய் ! நாரதரே ! கோவிலேது ? குளமேது ? ஏதோ கதை அளக்கிறீரே. போனால்போகிறது,' கதை சொல்கிறீரே என்றல்ல—வா சும்மாயிருந்தேன். ஒரு கல்லைவைத்து அதைச் சுவாமி என்று கூறிக் கூத்தாடித் தேங்காயை யுடைத்துப் பாமர ஜனங்களை ஏமாற்றிப் பார்ப்பான் பிழைக்க வழி யல்லவா ?

குழந்தாய் ! புத்தியிலும், வயதிலும், அநுபவத்திலும் குழந்தாய்! சற்றுப் பொறு. அளந்து பேசி அறிவுடையோன் எனப் பெயரெடு. நான் எவ்வளவோ படித்தும், அதிகப் பிரசங்கியா யிருந்து கலகம் செய்வதால் என்னை எவ்வளவு பேர் முதலெடுப்பில் தூற்றுகின்றனர். பிறகு விளையும் இன்பத்தைக் கண்டு பின் புத்தி வந்து வாழ்த்துவதிருக்கட்டும். நீ கடவுளையும் பெரியோரையும் நிந்தித்துப் பாவத்திற்கு ஆள் ஆகாதே. பாவம் ஏதென்று கூறி நரகத்திலே விழாதே. கடவுள், கோவிலென்ற விஷயத்தைக் கேட்டுவிட்டாய். பெரிய விஷயம்; ரஸமான விஷயம். சாப்பிட்டு விட்டாயா? பசிக்கிறதென் றுரைத்து நடுவில் எழுந்து போகக் கூடாது.

அப்படியானல் சற்று இரும். ஒரு பொடி மட்டைவாங்கி வருகிறேன். பசியையும் பொறுப்பேன். பொடி யில்லாவிட்டாலோ, அம்மம்மா: ஒரு நிமிஷமும் என்னால் தாங்க முடியாது

தம்பி! அப்படியே எனக்கும் ஒரு மட்டை.

என்ன ஐயா! எல்லாம் விசித்திரமாயிருக்கிறது. பொடியும் போடுகிறீரா? உமக்கு எல்லாக் கெட்ட பழக்கமும் உண்டு போலும்!

இப்பொழுதுதானே சொன்னேன். அதற்குள் மறந்து விட்டாயே. பேசுவதை நிறுத்து; அளந்து பேசு. போதாத காலம் எனக்கு ஒரு துர்ப்பழக்கம் வந்துவிட்டது. முன் காலத்தில் அரசர்களும், முனிவர்களும் ஆசார உபசாரம் செய்து எதிர்கொண்டழைத்து பாதயம் (காலலம்ப ஜலம்), அர்க்யம் (ஆசமனம் செய்ய ஜலம்), மதுபர்க்கம் (பழம் தேன் முதலியன) கொடுத்து உபசரித்தனர். நடுவில் பழைய சாதம் ஏற்பட்டிருந்தது. இப்பொழுது காபி, டீ, பொடி, சுருட்டு, விஸ்கி ஏற்பட்டன. இந்தச் சனியன் காபி கசக்கிறது. குடித்த உடன் வயிற்றைப் பிரட்டுகிறது. நல்லவேளையாக ஆளைப் பிரட்டவில்லை. விஸ்கிபுஸ்ஸென்கிறது; பயமாயிருக்கிறது; புட்டி தலையைச் சீவிக் கொடுக்கின்றனர். ஒரு கண்ணாடித்தூள் காலில் குத்தி ஆறு மாதம் ஆஸ்பத்திரிக்குப்போனேன். நாக்கிலே குத்தினல் செத்தே போவேன். சிகரெட்டு நுனியில் நெருப்பு இருக்கிறது. அது நாக்கையும் மூக்கையும் சுட்டு விடும். பொடி பரவாயில்லை.

எங்கப்பா பிரம்மாவின் பத்திரத்தால் (இலைபால்) செய்வதாம். இதையும் மறுத்தால் மரியாதை யிராது என்று சம்மதித்தேன். செலவும் அதிகம் இல்லை ஒரு தப்பிடிக்குப் பொடி தருவான். காபீ, டீ, அல்லது விஸ்கி தம்பிடிக்குக் கேட்டால் அன்னத்தைத்தொட்டுப்பார்க்கவேண்டியதுதான். கடைசியில் இந்தக் காலத்து மனுஷ்ய சகவாஸம் கெட்ட பழக்கம் ஏற்பட்டுவிட்டது. விட முடியவில்லை.

"தோட்டிற் பழக்கம் சுடுகோடு மட்டமே."

குழந்தைமுதல் நல்லுபதேசத்தினாலும் நல்வினஞ் சேர்தலாலுமே நற் பழக்கங்களும் புகழு முண்டாம். பழகுவதால் சாத்திய மாகாதது எது? கல்வி யறிவு படைத்த நற்றாயின் பேருபதேசத்தால் பல வீரரையும் பெற்றது நம் நாடு. குருகுல வாசத்தால் நல்ல பழக்கம் வாய்ந்து சிறந்து விளங்கிய முன்னோர் சுற்றவன் என்றாலே நல்லவன் என்ற பொருளை அதற் கீந்தனர். அவர்களுக்கு அரசனுடைய அவைகளிலும் ஜனசமூகங்களிலும் மரியாதை யிருந்தது.

"கற்றோர்க்குச் சென்றவிட மெல்லாஞ் சிறப்பு."

என்ற பழமொழி பிறந்தது. யுத்த காலத்தில் சாஸ்திராப்பியாசமும், பெரியவனாகி நல்லுபதேசம் பெற்று நல்லவனாக விரும்புவதும், வீடு தீப்பற்றி பெரியும்பொழுது கிணறு தோண்டுவது மொன்று. ஒரு கோவில் அர்ச்சகர் ஊருக்குப் போகவேண்டியிருந்தது. தன் பிள்ளையை யழைத்து நாளை வெள்ளிக்கிழமை. பக்தகோடிகள் சேவை செய்ய வரும்; வரும்படியை விடாதே என்று கூறிப்போந்தனர். மைந்தன் கோவிலுக்கு வந்தான். ஒரு கிழ அம்மா பழந் தேங்காய்களுடன் கோவிலுக்கு வந்தாள். அர்ச்சனை செய்தார். முதலில் மணியை அடித்துக் கற்பூரஹாராத்தி சுவாமிக்குக் காட்டினார். குருக்கள் குழந்தை. அம்மன் கோவிலுக்குச் சென்றதும் அம்மா ஒரே சமயத்தில் மணி அடித்துக் கற்பூர ஹாராத்தி செய்யவேண்டும் என்று விரும்பினாள். குழந்தை கம்கோஜி மறுப்பது அனுசிதம் என்று நினைந்து மணியை இடது கையிலும் தட்டை வலது கையிலும் வைத்துக்கொண்டு, கால்முதல் தலைவரை ஜோதியைக் காட்டக் கருதிக்கொண்டு போனார். ஆனால், மணியடிக்கமுடிய

வில்லை; மணி பெரிய மணி. அதனால் அம்மன்பேரில் ஒரு மொட்டு மொட்டினார். பிறகு மணியை அடிப்பதுபோல தட்டையும் ஆட்டினார். கைவழுக்கிக் கீழே போட்டார் அது எதனால்? பழக்க மின்மையினால் ஆகவே பழக்கம் அவசியம் எத்தகைய பழக்கம் ஜனங்களுக்கு நன்மை புரியும் பழக்கம். அழியாப் புகழையும் எல்லையிலாப் பேரின்பத்தையும் அளிக்கவல்ல நற்பழக்கம். நன்மை செய்வதற்கு நிமித்தமாய் பழக்கம். இது நன்மை இது தீமை என்று பகுத்தறிவதாற்றான் மாந்தர் விலங்கைவிட உயர்ந்தவர் ஆகின்றனர். இத்தகைய நல்ல பழக்கம் ஏற்படவே, மிருகத்தன்மை நம்மை விட்டகலவே, அழியாப் புகழையும். பேரின்பத்தை நாடவே நமது முன்னோர் கோவில்களை ஏற்படுத்தியுள்ளார்கள். சோழியன் சிண்டு சும்மா ஆடாது. 'மேயோ' நமது நாடு மேல் நாட்டினரின் பழக்கத்தை ஏற்க விரும்பி ஏமாறுவதைக் கண்டுதான் நம்மிடமுள்ள சாக்கடைச் சேற்றைவாரித் தன் மேல் பூசிக்கொண்டு இதுதான் இந்தியா, இந்தியா இப்படித்தான் நாறும்' என்று கூறிக்கொண்டு அரங்க மேடைகளில் காட்டியமாடுகிறாள். உண்மையில் நமது தேசத்துச்சாக்கடை நாற்றத்தையும் மீறிக்கொண்டு அவள் தேசத்துப் பூத் தோட்ட நாற்றமே வெளிக்கிளம்ப, அது இந்திய சாக்கடை நாற்றம் என அறிவு கெட்ட பலர் நம்புகின்றனர்.

ஒருவன் வழி நடந்தான் பகல்வேளை. வெய்யில் ஜாஸ்தி. களைப்பாற ஒரு ஆல மரத்தடியில் படுத்துறங்கினான். பிறகு எழுந்து சென்றான் மறுநாள் அந்த ஆலமரத்தில் பிரசாசிருப்பதாகக் கூறினர். ஐயோ! அந்த மடையன் அதை நம்பினன். தனதனுபவத்தையும் நம்ப அவனுக்குப் புத்தி யில்லை. அதுபோல் நாற்பது வயதாகியும் கன்னியான (நடத்தைக்கு நாம் உத்தரவாதியல்ல, பெயருக்கு உறுதி கூறுகிறோம்) ஒரு

மடந்தை கூறியதை நம்பும் புத்திசாலிகள் பலரைப் பிரமன் ஆலமரத்தானைப் பார்த்துச் சிருஷ்டித்தான்.

இந்தச் சாக்கடை எழுதிய புத்தகம் பார்விமெண்டு அங்கத்தினருக்கு இலவசமாய்ப் பறிமாறப்பட்டதாம். இன்னும் எவ்வளவோ வதந்திகள். பல வாஸ்தவத்தில் உண்மைகளே நானதைச் சொல்லவேண்டாம். நமது இந்தியாவில் பெரிய புலவர்கள் மூளை, தேகம், அநுபவம் இவைகளி னுழைப்பால் அபூர்வமாய், மிக மேன்மை பொருந்தியதாய் எழுதும் நூற்களை வாங்கி வழங்கலாகாதா? அதனுல் அந்த அங்கத்தினர்கள் இகத்திலும் பரத்திலும் சுக மெய்துவரே புலவருக்கும் உத்ஸாகம் பிறந்து இன்னும் பல நூல்கள் எழுதுவரே. வடமொழியில் பத்திரிகைகள் பிறப்பதும் இறப்பதுமா யிருக்கின்றன வடமொழியை மிகக் கொண்டாடுகின்றனர். சாக்கடை நாற்றத்தை அநுபவிக்க உதவிசெய்த மிருகஸ்பதிகள் உத்யான பத்திரிகை என்ற வடமொழியில் வெளிவரும் மாத சஞ்சிகையை—ஒரே ரூபாய் சந்தாவுள்ள மாத சஞ்சிகையை—திருவையாறு என்று கூறப்படும் ஊரிலிருந்து வெளிவரும். இதை ஐந்து ஆறுகளின் மத்தியில் விளங்கும் உன்னதமான உத்யானத்தில் (பூத்தோட்டத்தில்) வீசும் வாசனையைக் கிரகித்து வெளிவரும். தென்னுட்டில் இருக்கும் ஒரே பத்திரிகையை வாங்கி யளித்து அந்த நாற்றத்திலிருந்து சற்றுக்காப்பாற்ற முயறலாகாதா? அதற்குச் செலவழி.

குழந்தாய்! உன் சிறுபிள்ளைத்தனத்தைக் காட்டாதே என்று பலதரம் கூறினும் உன் வழக்கம்போகவில்லை. பிதற்றுகிறுய் அதிகப் பிரசிங்கத்தனம் செய்கிறுர். சற்றுப் பொறு. நானே எல்லாவற்றையும் கூறுகிறேன். நீ கிணற்றுத் தவளை. நான் நாடோடி. பல ஊர், பல மதம், பல ஆராய்ச்சி எனக்குத்தெரியும்.

நீ சற்றுப் புத்தியுள்ளவன். பிறர் கூறுவதை முழுவதும் கேட்டு ஆர அமர யோசனை செய்து எது நல்லது எது கெட்டது என்று அறியக்கூடியவன். ஆதலாற்றான் உன்னிடம் நான் தயை கூர்ந்து இவ்வளவு தாராளமாய்ப் பேசுவது.

ஒரு கிணற்றில் தவளை ஒன்று ரொம்பநாளாய் வசித்து வந்தது. அங்குச் சமுத்திரத்திலிருந்து தவளைஒன்று வந்தது. கிணற்றுத் தவளை குசலப்பிரச்னம் செய்து (க்ஷேமம் விசாரித்து) எங்கிருந்து வருகிறாய்? என்றது. 'சமுத்திரத்திலிருந்து' அது எவ்வளவு பெரிது? 'அது ரொம்ப பெரிது.' ஒரு எழும்ப எழும்பி ஒரு அடி தாண்டிக் குதித்து இவ்வளவு பெரிதாயிருக்குமா? இல்லை இன்னும் பெரிது.' மூன்றடி தாண்டிக் குதித்து இவ்வளவுபெரிதா? என்றது கிணற்றுத் தவளை இல்லை இன்னும் பெரிது என்று பதில் அளித்தது சமுத்திரத்தவளை கிணற்றை ஒரு சுற்றுச் சுற்றிவந்து இவ்வளவு பெரியதா? என வினவிற்று. இன்னும் பெரிதானது என்றது கடற்றவளை. வந்துவிட்டது.கோபம். சேய்! பொய்யனே. உலகை ஏமாற்றுகிறாய். இதைவிடப் பெரிதுமுண்டா?ஓடிப்போ!கழுதையே! நின்றாயானல் கழுத்தை முறிப்பேன் என்று திட்டிற்று. கிழத்தவளை குட்டித்தவளைகள் ஆமாம் ஆமாம் என்றன. பார்த்தது,யோசித்தது. அந்தோ! நிர்வாணதேசத்தில் கோவணம் கட்டியவன் பைத்தியக்காரன் என்று இந்த அறிவிலிகளுடைய நடுவிலிருந்து ஓடுவதே சிறந்த வழி என்று தீர்மானித்தது.

நீ அத்தகையனல்லன். கோபம் வராது. ஒருக்கால் இதைவிடப் பெரிய சமுத்திரம் ஒன்றிருக்கலாம் என்றுநினைப்பாய். ஆகையால், வாய்ப்பதட்ட மில்லாமல் காது கொடுத்துக் கேட்டாய்.

ஆரியர்கள் வேறு திராவிடர்கள் வேறுஎன்றுசொல்வது பிசகு என்பார் ஒரு சாரார். அதற்கு ஒவ்வொன்றாய்க் காரணம் கூறுகிறேன். ஆழிசூழ் இவ்வுலகில் ஒவ்வோரிடத்திலும் ஆதியில் மனிதர் வசித்தே வந்தனர். அஃதேபோல இந்தியா என்ற நமது புண்ணிய பாதகண்டத்திலும், நாடு சீர்திருத்தப்படாதிருந்தபோதிலும் வசித்தே வந்தனர் மனிதர்கள். அவர்கள் மிலேச்சர்கள் அல்லது இராக்கதர்கள் என்று அழைக்கப்பட்டனர். பிறகு துரேனியர் இந்தியாவில் நுழைந்து மிலேச்சர்களை வென்று நாட்டை யாண்டுவந்தனர். பிறகு ஆரியர் நுழைந்து ஜயித்தனர் என்பது ஒருவகுப்பாரின் கொள்கை. இந்தக் கொள்கையே ஏற்றுத் தாம் தூம் என்று குதிப்பவரோடு தன்னை யறியாமற் சேர்ந்து தாண்டவமாடுகிறாய். அப்படியே வைத்துப் பேசுவோம். அக்காலத்திருந்த இராக்ஷதர்கள் எங்கே? திராவிட எங்கே? தீண்டாத வகுப்பினர் எனக்கருதிவரும் ஆதித் திராவிடர்களைத் திராவிடர்கள் என்று வைத்துக்கொள்வோம். திராவிடர்கள் இந்தியாவில் நுழைந்துயுத்தம்செய்து மிலேச்சர்களை வென்று ராஜ்யம் ஆண்டவரன்றோ? அன்னவர் ஆரியர்தங்களைத் தீண்டாதார் என்று வெறுத்துத் தூர விலக்கி வைப்பதைச் சகிப்பது முடியுமா!" காட்டிலும், மலையிலும், ஆரியர் பிரவேசிக்க முடியாத இடத்திலும் சென்று தங்களை வலுப்படுத்திச் சுதந்திர வீரர்களாகவிளங்குவரா? அடிமைப்பட்டுத் தீண்டாதவன் என ஊருக்குவெளியில் விலக்கி வைக்க ஒருப்படுவரா? இரண்டொருவர் சம்மதித்தாலும் எல்லோரும் சம்மதிப்பது முயற்கொம்புதான். ஒரு சிலர் ஆரியர் சொல்வதைக் கேட்டுநடக்கச் சம்மதிக்கப்பிறர்வேறு வகையின்றி அவ்விதமிருக்க ஒத்துங் கொள்ளவும் மாட்டார்.

தன்னுடன் சரிசமமாய் வாழ்ந்த கோழைகளான உற்றாரும் உறவினரும் ஜயித்தவர்களுடன் சேர்ந்து மேல் ஜாதி

யாக விளங்க, அத்தகைய அடிமை வாழ்வை ஏற்க மறுத்த வீரர்கள் தீண்டாதவராக இருக்க ஒருக்காலும் சம்மதிக்க மாட்டார்கள். ஆகையால், இந்த ஊகம் துடப்பக்கட்டையின் நுனிதான்.

திராவிடரில் சிலர் ஆரியருடன் சேர்ந்து சூத்திரர்—நாயகருடையஆராய்ச்சிப்படிதேவடியாள் குழவிகள்—என்ற பட்டத்துடன் வாழ்ந்தனர் என்பதும் பகற்கனவு. சரித்திரம் இல்லாத விடத்தில் நுழைந்து கண்ணைக்கட்டிக் காட்டில் விட்டவிடத்தில் குருடர்கள் யானை பார்த்ததுபோல ஏதோ ஒன்றைக் கண்டு சண்டை போடவேண்டாம். இருட்டில் போய் மூட்டிக்கொண்டு தலையில் கட்டி புறப்படவேண்டாம். வெளிச்சத்திற்கு வருவோம்.

85685

மஹாநந்தி சூத்திரஸ்திரீயினிடம் பிள்ளைகளைப் பெற்று ராஜ்யம் ஆண்டான். அவனுக்குப் பிராமணன் மந்திரி. முரை என்ற சூத்திர ஸ்திரீக்கு சந்திரகுப்தன் பிறந்தான். அவனுக்கு சாணக்யன் என்ற பார்ப்பனன் உதவி செய்தான். கிரேக்கப் பெண்ணைச் சந்திரகுப்தன் மணந்தான். அவன் பிள்ளை பிந்துசாரன் பார்ப்பனத்தியை மணந்தான். அசோகன் பிறந்தான். இது கதையல்ல. தக்க ஆதாரங்களுடன் கூடிய சரித்திரம். இதை நாயகர் ஆராய்ச்சியோடு ஒத்திட்டுப் பார்ப்போம்.

தேவடியாள் பெண்ணை ராஜா மணந்து பட்டமகிஷியாக்குவது. அவனுக்கு ஏதோ ஒரு தேசத்துப் பெண் வயிற்றில் பிறந்து வளர்ந்த தேவடியாள் வர்க்கத்தைச் சேர்ந்த ஒருவனைப் பார்ப்பனத்தி மணக்க முடியுமா? அசோகனுக்குப் பிறகு கொடுங்கோல் செலுத்திய காஷ்மீர அரசனை வேதியர் தபோ பலத்தால் ராஜ்பத்தைத் துறக்கச் செய்ததாக ராஜதரங்கிணீ கூறும். தபோபலம் என்பதை 'துஷ்யது துர்ஜனஃ'

என்ற பழமொழிப்படி சூழ்ச்சியால் என்று கூறுவோம் அந்தச் சூழ்ச்சி எங்குப் போயிற்று? சாயவில்லை என்று கூறலாம். பிந்துசாரனுடைய தகப்பன் காலத்தில் சாய்ந்த சூழ்ச்சி பிள்ளை காலத்தில் விறைத்து நிற்பது ஆகாயக் கோட்டை. ஆகவே, இத்தகைய ஆராய்ச்சி உப்புக்கு முதவாத ஒழிந்த வேளையில் செல்லும் வியபசாரம்.

மற்றொரு சாரார், ஆதியில் ஜாதிபேதமில்லை. ஆரியர்கள் எத்துறையிலும் முற்போக்குள்ளவர். சிலர் கல்வியிலும், சிலர் பகைவரை வேரறுப்பதிலும், பிறர் வியாபாரம் முதலிய துறைகளில் பொருளீட்டுவதிலும், ஏனையோர் அனைவருக்கும் உதவி புரிந்து— ஊழியம் செய்வதிலும்—காலத்தைக் கடத்தினர். ஒருவனே அதைவிட்டு இதிலும் இதைவிட்டு திலும் சென்றுவந்தான் அவன் "அக்கரைக்கு இக்கரை பச்சை" என்று ஓடும் மாட்டைப் பின் தொடர்ந்தான். காந்தத்துடன் சேர்ந்த இரும்பும் இரும்பை இழுக்கச் சக்தி எய்துவது போன்று மாட்டின் சக்தி இவனுக்கும், இவனைச் சேர்ந்த சிலருக்கும் வந்தது.

ஆயினும்,

"குளத்தளவே யாகுமாம் குணம்."
"புலிக்குப்பிறந்தது யானையாகுமா?"
"தோட்டிற்பழக்கம் சுடுகாடு மட்டும்"

இந்தப் பழமொழிகள்-நான் பின் சொல்லுபவைகளுக்கு வரிசையாகக் காரணங்கள். அது புரியாவிட்டால் நான் என்ன செய்வது! கல்விமான்-புள்ளிமான் அல்ல—அதைப்போன்ற ஒரு ஜந்துவுமல்ல—வித்தை கற்றவன், புலவன், பண்டிதன், அல்லது கற்றோன் வயிற்றிற் பிறந்தவன் கற்பதில் சூரனாக

வும்,சூரன் வயிற்றிற் பிறந்தவன் சண்டை போடுவதில் கெட்டியாகவும், செட்டி—வியாபாரம் முதலிய வழிகளில் திரண்ட திரவியம் தேடியதால், பண முள்ளவன் சிறந்தவன் என்ற உலக வழக்கப்படி—சிரேஷ்டி-உயர்ந்தவன் வயிற்றிற் பிறந்தவன் பணந் திரட்டுவதில் உழைப்பாளியாகவும், உழைப்பாளி—ஊழியம் செய்பவன் வயிற்றிற் பிறந்தவன் அந்தத் துறையில் மிகமிகச் சிறந்தவனுகவும் இருந்ததால் பெற்ரேருடைய விருத்தியைத் தாங்களும் செய்யத் தொடங்கினர். பிறகு கொஞ்ச நாள் ஆனபிறகு, அதது ஒரு ஜாதியாகப் பிரிந்தது. நாழிகை யாகிவிட்டது, மற்ருரு நாள் வந்து ஜாதி விவாதத்தைப்பற்றி விரிவாகச் சொல்லுகிறேன். பாரதமும் இந்த சமாசாரத்தை - கர்மாவிஞல் ஜாதியுண்டாயிற்று என்று கூறுகிறது. பகவத் கீதையை மஹாத்மா காந்தி சொல்வதுபோல ஊன்றிப் படி! உண்மை தெரியும். குணத்திலும் தொழிலினுலும் ஜாதியை உண்டாக்கினேன் என்று கூறுகிருர் கண்ணன். ஆதலால், திராவிடரிலும் பார்ப்பனரும், ஆரியரிலும் சூத்திரரும் உண்டாயிருக்கவேண்டும். ஆகவே, திராவிடரெல்லோரும் சூத்திரரல்ல. இலங்கையில் திராவிடரைச் சேர்ந்த இராக்ஷதன் இராவணன் ஆண்டகாலத்தில் சிவன்கோவிலும் வேதமோதுவோரும் இருந்தனர் என்று ராமாயணம் படித்தால் தெரியவரும். வேதம் ஓதுவோர் வேதியர். திராவிடர்களை இழித்துக் கூற இராமாயணம் எழுதப்பட்டதாக ஒரு சிலர் கூறுவதை ஒத்துக்கொண்டாலும் பரவாயில்லை. அந்தத்திராவிடர்களிலும் பிராமணர் இருந்தனர். இராவணன் சாமவேதத்தைப் பாடிப் பரமசிவனைத் துதித்து வாளும் வரமும் பெற்றவன். அவன் சிவபூஜை செய்யும்பொழுதே கார்த்த வீரியன் தன் நாயகிகளோடு ஜலக்கிரீடை செய்து நதியை இரண்டாயிரம் கைகளாகிய மரங்க

ளால் அணை போட்டுப் பூஜைக்குவிக்கினம் செய்தான். சண்டை மூண்டது. அப்புறம் கதை நமக்கு வேண்டாம். எனவே, திராவிடர்கள் சிவபூஜை வேதமோதுதல் இரண்டையும் செய்து வந்தனர்என்பது வெள்ளிடைமலை நான் அதைக் கண்ணாலும் பார்த்திருக்கிறேன். அப்பா! இந்தக் காலத்தில் கண்ணாலும் கண்டதும் பொய், காதல் கேட்டதும் பொய், யுக்திகளுடன் ஆராத்திர விசாரித்தது மெய். அதனாற்றான் யுக்தி கூறுகிறேன். புரியாமற்போனால் கேள்! சந்தேகமிருந்தால் கேட்டுத் தெரிந்துகொள்! தன்னைவிடத் தெரிந்தவர் இல்லையென்று நினைப்பது மடமை.

"கற்றது கைம்மண்ணளவு கல்லாததுலகளவு"

இன்னும் என்தாய்-சரஸ்வதி-படித்து வருகிறாள். ஞாபகமிருக்கட்டும். இதனால்தான் மெக்டானல் போன்ற மேல் நாட்டு வடமொழிநூற் சரிதப் புலவரும் ஆரியர் சிவ பூஜையையும் நாக பூஜையையும் திராவிடரிடமிருந்து கற்றுக் கொண்டனர் என்று கூறுகின்றார்கள் போலும்!

பீமசேனன்: இராக்ஷஸியைக் கல்யாணம் செய்துகொள்ள விரும்பினான். இதிலிருந்து பரஸ்பரம் மணத்தால் சம்பந்தமிருந்துவந்தது. ஆகவே, திராவிடரும் ஆரியரும் ஒன்றாகவே கலந்தபின் ஜாதி விவாகம் ஏற்பட்டது. ஆரியர் தங்களிட மிருந்த எட்டுவிதமான விவாக பேதத்தைத் திராவிடர் மத்தியில் புகுத்தியதாகத் தொல்காப்பியம் கூறும். அதாவது, திராவிடரும் ஆரியரும் ஒன்றாய்க் கலந்தனர். ஆகவே, இப்பொழுது திராவிடரையும் ஆரியரையும் பிரிப்பது கூடாத காரியம். திராவிடன் தனி ஜாதி என்று ஏற்றுக்கொள்வோம். தனியான மதநூலுண்டா? நீதிநூலுண்டா? திராவிட மதம் என்று ஒரு மதமும், திராவிட நீதி நூல் என்று ஒரு நூலு

மில்லை. ஒரே கடவுள் பாணினியையும் அகத்தியரையும் அனுப்பி வடமொழி தென்மொழிகளை வகுக்கச்செய்தார். எனவே, இரு ஜாதியும் வேறல்ல. மதமும், நீதியு மில்லாமல் ஒரு ஜாதி வாழ்வது கூடாத காரியம். என் அன்னை மொழி தமிழை யிகழ்வதாக உன் களிமண் மூளையின் சக்தியால் எண்ணிவிடாதே. அப்படி ஒரு ஜாதியிருந்துசிறந்து விளங்குமா? இதெல்லாம ஊற்றுக்கு நிற்காத வாதம். உலகிலுள்ள எல்லா ஜாதியும் சங்கரஜாதிதான், அதாவது, பல ஜாதிகள் சேர்ந்ததுதான். அதாவது பலபல தேசத்தினர் பலபல தேசம் சென்று விவாஹம் முதலியவைகளால் ஒன்றாகி நிற்பவர்தான்.

இவ்விதமாக ஆரியரும் சரி, திராவிடரும் சரி, அவரவர் தம் முன்னோரும் சரி பின்னோரும் சரி ஆஸ்திகர்கள்—தெய்வம் உண்டென்று நம்பி ஆடிப்பாடித் துதித்து வந்தவர்கள். அப்பொழுது கோவில் இல்லை என்று சிலர் எது எப்படியிருந்தால் என்ன? படித்தவர்களுக்கு அக்காலத்திலும் மதிப்புண்டு. இக்காலத்திலும் இனி எக்காலத்திலும் மதிப்புண்டு, அவர்கள் கடவுளை ஒப்புக்கொண்டனர். நிறைகுடம் தளும்பாது குறைகுடம் தடும் புடும் என்ற சப்தத்துடன். கடவுள் ஏதப்பா? என்று கூத்தாடிற்று. இவ்வளவு பெரிய பிரம்மாண்டத்தைச் சிருஷ்டித்து, சூரிய சந்திராதிகளை உண்டுபண்ணி, மழை முதலியவைகளை யளித்து நம்மை ரக்ஷிப்பவன் நாமல்ல. அது இயற்கை ஆம், இயற்கைதான். அதாவது, தானாய் உண்டானது. அதை நம்மால் உண்டுபண்ண முடியாது. அந்த இயற்கையின் சக்தி அபரிதமானது, அளவிட முடியாதது. அது நமக்கு உதவி செய்கிறது. நன்றிமறிப்பது நன்றன்று. உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு. உனக்குப் பசிக்கிறது. உண

வளித்தான் ஒருவன். அவனை நீ வாழ்த்தமாட்டாயா? நீ வாழ்த்தாது போனாலும் உன் வயிறு வாழ்த்தும் உன் பொடிமட்டை காலியாகிவிட்டது. விழித்தாய் பொடி போடும் சத்தம் கேட்டது அங்குத் திரும்பிப் பார்த்தாய். ஓஹோ! சார்! பட்டணம் பொடியா தயவு செய்து ஒரு சிட்டிகை கொடுங்கள் ஒன்று கேட்டாய். தயாள குண முள்ளவர். கொடுத்தார் வந்தனம் என்றுகூறுகிறாய். கர்ணன் என்று துதிக்கிறாய்.

அவ்விதம் இயற்கையை வாழ்த்தினர். அதன் அழகை வருணித்தனர். அதன் குணத்தைப் புகழ்ந்தனர். இயற்கை எத்தகையது; ஆதியில்லை, அந்தமில்லை. அளவிட முடியாத சக்தி வாய்ந்தது கடவுள்? அதுவும் அப்படியே இயற்கையைக் கடவுள் என்று துதித்தால் அதையேயன்றோ துதிக்கவேண்டும், கும்பிடவேண்டும்; அதற்குத் தேங்காய் உடைக்க வேண்டும்; கோவில்கட்டவேண்டும் என்று உனக்கு ஆக்ஷேபம் எழுகிறது; உன் மூஞ்சி (முகம்) யைப் பார்த்தால் தெரிகிறது அவசரப்படாதே. அந்த இயற்கைகள் என்னென்ன?

நீர், நெருப்பு, காற்று, பூமி முதலியன. இவைகளால் பிராணிகளுக்கு அளவிறந்த நன்மைகள் ஏற்படுகின்றன. எனவே, ஜனங்கள் இவைகளைத் துதிக்க ஆரம்பித்தனர். இதுவரை சொல்லிவந்தது மேல்நாட்டினரின் ஆராய்ச்சி. இதைக் கேட்டுத் துள்ளிக் குதிக்காதே! இதைக் கற்பிப்பதில் கொஞ்சம் புத்திசாலித்தனம் வேண்டும். அதை இது காட்டுகிறது. மேலே கவனிப்போம். இவைகளுக்கும் எவ்வளவு சக்தியிருக்கவேண்டும் என்று நமது முன்னோர் ஆஹாரம் நித்திரை யிரண்டிலும் மனவமைதியடையாத பெரியோர்-தேகாதிரிக்தமான ஸூக்ஷ்ம வஸ்துக்களையும் கண்டு பிடிப்பதில் மனதைச்

செலுத்தினர். அவைகளே தர்சனங்கள். இவைகளைப் பார்த்தே மேல்நாட்டார், ஆத்மார்த்த வழியில் இந்தியரைவிடச் சிறந்தவர் வேறில்லை என்று கூறுகின்றனர். நிற்க: நீர், நெருப்பு முதலியவைகளுடைய அபார சக்திக்கு எங்கும் நிறைந்த சர்வ வல்லமையுள்ள அறிவானந்தன் பரம்பொருள் காரணம் என்று பெரியோர் கண்டுபிடித்தனர். குழந்தாய்! அவனே கடவுள். அவனைத் துதிப்பாயாக! கருணாமூர்த்தி கருணைபுரிந்து தன் ஸ்வரூபத்தை உனக்குக் காட்டுவான்.

அவரை எப்படி எவ்விதம் துதிக்கவேண்டும் என்பதைப்பற்றி இப்பொழுது சொல்ல நேரமில்லை. சுருதிகளும் (வேதங்களும்) ஸ்மிருதிகளும் என்னுடைய ஆணை என்று கூறுவதால் கடவுளின் குழந்தைகளான நாம் கடவுளின் ஆணைக்குக் கீழ்ப்படிந்து நடந்தால் நம்மிடம் பிரியமுண்டாகும். நமக்குப் பெற்றோர், சந்தோஷம் வந்தால், விரும்பியதையளிப்பதுபோலக் கேட்ட வரம் கொடுப்பார். அவருடைய பிரியத்தைச்சம்பாதிக்க ஒரே வார்த்தையில் சொல்லுகிறேன். அவரிடமும் அவர்தம் குழந்தைகளிடமும் மெய்யன்பு பூண்டொழுகவேண்டும். இதையே ஏசுநாதர் திருப்பித் திருப்பிக் கூறுகிறார். அன்பே சிவம் என்ற திருமந்திரமும் இதையே கூறும். அந்த விசாரம் பிறகு செய்வோம்.

கடவுளிடத்தில் எல்லோரும் பக்தி செய்து அவரது கருணைக்குப் பாத்திரமாகக் கோவில் இல்லாத விஷயத்தில் வேறு வழி கிடையாது. இது புத்தர் கற்றுக்கொடுத்த வழி என்று விமர்சகர் கூறுவர். இருக்கட்டும்.

கடவுளைச் சொல்லிப் பயமுறுத்திப் பாமர ஜனங்களைப் பாவ வழியில் செல்லாமல் தடுக்கப்படுகிறது என்று ஒருவர் சொன்னர். அது அவருடைய கற்பனை. அப்படிப் பயமுறுத்தி

ஒழுக்கத்தில் திருப்பச் சாமிவேண்டியதில்லை என்கிறாய். குழந்தை எவ்வளவோ சொல்லியும் கேளாமல் நெருப்பின் சமீபம் போகிறது. சுடும் என்று கூறுகிறோம். முதலில் அது சூடுபட்டிருந்தால் பயந்துகொண்டு பின் வருகிறது. அல்லது அடிப்பேன் என்று கூறிப் பய முறுத்துகிறோம். அது தப்பா? அட! அழுகிய மூளையே! உலக்கைக் கொழுந்தே!

பயமுறுத்தி நன்னெறியில் பாமர ஜனங்களை ஒழுகச் செய்வதும் ஒரு பிரயோஜனம் என்று அதற்குப் பொருள். வேறு பிரயோசன மில்லை என்று எந்த நூல் கூறியது? ஊத்தைவாயைத் திறக்காதே!

அரசாங்கச் சட்டங்கள் எதற்கு? தீயவழியிற் செல்பவனைப் பயமுறுத்தி நல்வழியை நாடச் செய்வதற்கே. அது பிசகென்று கூறினல் உன் மூளையைச் சிருஷ்டித்த பிரமனைத் தான் திட்டவேண்டும்.

ஒருவனைத் திருத்தப் பல வழிகள் இருப்பதாக வைத்துக் கொள்ளுவோம். அதில் கடவுள்: தீய வழியில் நடந்தால் கோபிப்பார் என்ற பயமுறுத்தலால் திருத்துவது கூடா தென்பதற்கு உனது அழுகிய மூளை காரணமோ?

எனக்கு நாழிகையாகிவிட்டது. மற்றொருநாள் வந்து விவரமாய்உன்சந்தேகங்களைப்போக்குகிறேன். எல்லாம் வல்ல இறைவனை இந்த மாய உலகில் அடிபட்டு ஏங்கித் தவிக்கும் நாம் ஒரு கவலையு மில்லாமல் மனதைச் செலுத்தி அரைக்ஷணமாவது தியானம் செய்யக் கோவில் அவசியம். உனது பால்யத்தையும் சினேகிதர்களையும்-கடந்தவர்கள்: இருக்கிறவர்கள் என்ற இருவித உற்றாரையும்-உனது அந்திய காலத்தையும்-மரணம் நிச்சயம் என்று நினைத்து யோசித்துப்பார். கடவுளிடம் பக்தி செலுத்துவாய். உன் பிடரியில் மரண மிருக்

கிறது இன்றைக்கோ! நாளைக்கோ! கடவுளிடம் மன்னிப்புக் கேட்காமல் அவரை வைது நரகத்தில் வீழாதே.

ஒருவருடைய மதத்தையும் முழுவதும் தெரியாமல் தெரிந்ததுபோல வீம்புக்குப் பேசிப் பல்லை யுடைத்துக்கொள்ளாதே. பெரியோர் சொல்வதைக் கேள்! மனிதனுய்ப் பிறக்க எவ்வளவோ புண்ணியம் செய்திருக்கவேண்டும். அவ்வளவு புண்ணியம் செய்தும் முக்தியடைய வழி தேடாமல் முன்னோரை நிந்தித்து நரகத்தை யடைய முயலுவது மடமை.

நாம் செய்த தவறுகளை மன்னித்துவிடும்படியும், இனிச் செய்வதில்லை என்று சபதம் செய்யவும், எந்தையை ஓரிடத்தில் வைத்துப் பேரின்பம் பெறத் தியானம் செய்யவும் ஓரிடம் அனைவருக்கும் அவசியம். அதுதான் கோவில்.

"திருக்கோயி லில்லாத திருவி லூருந் திருவெண்ணீ றணியாத திருவி லூரும், பருக்கோடிப் பத்திமையால் பாடா வூரும் பாங்கினொடு பலதளிக ளில்லா வூரும், விருப்போடு வெண்சங்க மூதா வூரும் விதானமும் வெண்கொடியு மில்லா வூரும், அருப்போடு மலர்பறித்திட் டுண்ணா வூரு மவையெல்லா மூரல்ல அடவி காடே."

—திருநாவுக்கரசு சுவாமிகள்.

" மூர்த்திதலந் தீர்த்த முறையாற் றொடங்கினர்க்கோர்
வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே."

—தாயுமானவர்

" ஆலயம் தொழுவது சாலவும் நன்று."

—கொன்றைவேந்தன்.

" கோயிலில்லா வூரில் குடியிருக்க வேண்டாம்."

—உலகநீதி

நாஸ்திகம் ஒழிக!
ஆஸ்திகம் ஓங்குக!!

உ

கடவுள் துணை

பண்டிதமாளவியாவின் ஆஸ்திகப் பேருரை

[சென்னை "தேசபந்து" (4-5-1929) லிருந்து எடுக்கப்பட்டது]

1929 மேமீ 2உ சென்னைக் கடற்கரையில் ஸ்ரீமான் ஏ. ரங்கசாமி அய்யங்கார் அவைத்தலைமையில் பேசியது. இம் மாகாணத்தில், ஜாதி வருணங்களை ஒழித்துக் கடவுளையுமே ஒழிக்கவும் ஒரு இயக்கம் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக நான் கேள்வியுறுகிறேன். (சிரிப்பு) கடவுளை யழிப்பதற்காக ஓர் இயக்கம் தோன்றியிருப்பதைக் கேட்க எனக்கு வருத்தம் ஏற்படுகிறது. கடவுளை யழிக்க இவர்கள் செய்யும் பிரயத்தனத்தால் கடவு ளில்லாமற் போய்விடமாட்டார். கடவுள் இல்லையென்று எவ்விதம் கூற முடியும்? நாம் பிறந்திருப்பதும், நம் சுற்றிலும் காணப்படும் அற்புத சிருஷ்டிகளும், உலக விந்தைகளும் பகவான் ஒருவ ரிருக்கிறார் என்பதை உணர்த்தவில்லையா? உலகம் நடக்கும் ஆச்சரியமான காரியமும், வெவ்வேறு விஷயங்களும் தாமாக ஒன்றுடன் ஒன்று பொருந்திச் செல்வதும் ஒரு சிருஷ்டி கர்த்தாவிருக்கிறார் என்பதை எடுத்துக் காட்டவில்லையா? சகல சக்தி வாய்ந்த பரமாத்மா ஒருவரிருக்கிறார் என்பது மெய். அவருடைய பெருமையை அறிய முடியாதவர்கள் பதர். உலக இயல்பைத் தெரிந்துகொள்ளச் சக்தியற்றவர்கள்தான் கடவுளில்லை யென்பார்கள். கடவுள்

என்று பெயர் சொல்ல விரும்பாத சாஸ்திரஞானிகளும் தத்துவாசிரியர்களும்கூடக் கடவுள்என்றொருஅந்தர்யாமியுளார் என்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். நாஸ்திகர்கள் என்று அழைக்கப்பட்ட ஸ்பென்ஸர், ஹெகேல் முதலிய சாஸ்திராசிரியர்களும் தெய்வமென்றொன்றுளது என்று ஒப்புக்கொள்ள நேர்ந்திருக்கிறது. கடவுள் என்பதற்குப் பதிலாக ஹெகல் என்பவர் கண்ணுக்கோ ஸ்பரிசத்திற்கோ தென்படும் வஸ்துக்கள் என்றும், தென்படாத ஆவியென்றும், மூலப் பொருளைப்பற்றி வியாக்யானம் செய்திருக்கிறார். இவர் கூறுவது அநேகமாக நமதுவேதாந்தத்தையனுசரித்திருக்கிறது. ஸ்தூலம் என்றும் ஆத்மன் என்றும் வேதாந்தத்தில் கூறப்படுவதை அவர் பொருள் ஆவி யென்றும் வியாக்யானம் செய்திருக்கிறார். உலக அனுபவத்தில் இயந்திரங்களை யசைத்து வேலைசெய்ய உதவிபுரியும் இஞ்சினியர்களிருக்கிறார்கள். அதையொப்ப, கடவுள்: உலகத்தை நடத்திவருகிறார். கடவுளுக்கும் இஞ்சினியருக்கும் வித்தியாச முண்டு. இஞ்சினியர் பிற பொருளை நடத்துகிறார். கடவுளோ தம் சிருஷ்டி மூலம் தாமே ஜீவனை மேலிட்டுச் செல்லுகிறார். இவ்வித மிருக்கையில் கடவுள் இல்லையென்று பிரசாரம் செய்வதற்கு இடமளிக்கக் கூடாது என்று உங்களை நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இம் மாகாணத்தில், கடவுளை யழிப்பதுடன் நில்லாது, கடவுளைஅடையச் சாதகமாக விருக்கும் கோவில்களை அழிக்கவும் சிலர் முற்பட்டிருப்பதாகக் கேள்வியுறுகிறேன். இது கொஞ்சமேனும் சரியில்லை. அந்தச் செய்கையை அவர்களே கைவிட்டுவிடவேண்டும். ஜாதிவருணங்களையும் அழிப்பதற்காகச் சிலர் முன்வந்திருப்பதாகவும் கூறப்படுகிறது. இம் முயற்சி வீணுகும் என்பதில் சந்தேக மில்லை. இந்தியாவில்

ஆதிகாலம் தொடங்கி இதுவரை செய்யப்பட்டுவரும் இத் தகைய முயற்சி பலன் தந்ததில்லை. இதனால் மற்றோர் குட்டி ஜாதி ஏற்பட்டுவிடுமே தவிர, ஜாதி வருணங்கள் அழியா. ஜாதி வருணங்களை ஒழிக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் கடைசியாகக் கொஞ்சக்காலமுன் வந்தவர்கள் பிரம்மோ சமாஜத் தலைவர்கள். இவர்களை யாதரித்தவர்கள் வெகு சிலரே. இப்பொழுது அவர்களுடைய நிலைமை யென்ன? ஒரு ஆபி ரம்பே அடங்கிய கோஷ்டியொன்று பிரம்மோ சமாஜிகள் என்று தனியாகப் பிரிந்துநிற்கிறது. நம் சமூகத்தில் காணப் படும் ஊழல்களை நீக்கிச் சீர்ப்படுத்தவேண்டும் என்று ஆவல் கொண்டிருப்பவர்கள் தங்கள் பிரயாசை பலிக்குமாறு உழைக்க விரும்பினால், ஜாதி வருணங்களை அழித்துவிடுவது என்று வீணெண்ணம் கொள்ளாது உயர் வாழ்க்கை வாழ்வு உதவிபுரியவேண்டும் என்றே நான் கூறுவேன்.

கோயில்களை யழிப்பது என்பதும் அசட்டுத்தனமான காரியம். கோயிலில் சென்று அங்குப் பிரதிஷ்டை செய்யப் பட்டிருக்கும் விக்கிரஹத்தைத் தொழவே சாஸ்திர ஆதாரங்க ளிருக்கின்றன. கடவுள் இல்லாத இடமில்லை என்று வேதம் மொழிகிறது. கோயிலிலிருக்கும் விக்ரஹத்தில் கடவுளின் ஆவி பூராவும் பிரதிஷ்டையா யிருக்கிறது. கடவுள் எந்த அணுவிலும் காணப்படுகிறார். ஆகையால், பக்தியுடனும் சுத்த மாகவும் எந்த மண்ணையும் தெய்வமாக வரித்துத் தொழலாம் என்று தெரிந்துகொள்ளவேண்டும். பார்த்திவ பூஜை செய்வ தைக் கவனித்தால் இதன் தாத்பர்யம் நன்கு விளங்கும். மனிதன் நல்ல புண்ய தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து மடியாக அந்த ஆற்றின் அடியில் மூழ்கி ஒருகை மணல் எடுத்து, அதை உருவாகப் பிடித்து, ஜலம் புரோட்சித்து, அக்ஷதை புஷ்பம், இன்னும் பல பூஜை சாமக்கிரியைகளை அதற்கு அர்ச்சனை

செய்கிறான். அப்பொழுது என்ன சொல்லுகிறான். மகிம்ஸ பரீம்தே! என்கிறான். அதாவது, ஓம் ஸ்வாமி பிரம்மாமுதல் சர்வ சாமான்யமனிதர் ஈறாக யாவராலும் அறிந்துகொள்ள முடியாத பரம்பொருளே! தங்களையும் தங்கள் பெருமை யையும் அற்பமனிதனாகிய நான் எவ்வாறு வருணிக்க முடியும்? என்னுள் அறிவிற்கடங்கிய தங்கள் பாதாரவிந்தங்களில் இந்த ரூபமூலம் தொழ அனுக்கிரஹிக்கவேண்டும் என்று கூறி அதை ஆராதிக்கிறான். இதிலிருந்து என்னஏற்படுகிறது? மணலின் ஒவ்வோர்சிறு கல்லிலும்கூடக் கடவுள் இருக்கிறார். அவர் எங்கும் வியாபித்துள்ளவர்; சர்வ சக்தி வாய்ந்தவர்; சர்வாந்தர்யாமி. அத்தகைய மூர்த்தியை நாம் நம் முன் னுள்ள சிறு உருவத்தில் கிரஹித்துக்கொள்ளுகிறோம். அவ் விதம் கிரஹிக்கப்பட்டுள்ள உருவங்கள் பூஜிக்கப்படும் புனித மான கோயில்களுக்குச் சென்று தெய்வம் தொழுது மனோ திடமும் சாந்தமும் பெறுவது எவ்வழியில் கெடுதலாகும்? கோயிலுக்குச் செல்பவர்கள் பக்தி பரவசராகிறார்கள். கோயி லில் தூய்மையாகப் பூஜிக்கப்படும் விக்ரக முன்னிலையில் சரீர சுத்தத்துடனும், மனோவாக்குச் சுத்தத்துடனும் நின்று தெய் வத்தைத் தியானிப்பவர்கள் மனம் நிம்மதியுற்றுப் பரவசமா யிருக்கும் சமயத்தில் உயர் நோக்கங்களும் ஞானமும் நமக்கு உதயமாகின்றன. இத்தகைய உணர்ச்சிக்கு இடமளிக்கச் சாதனமாக விருக்கும் கோயில்களையும் விக்ரக ஆராதனைகளை யும் ஒழிப்பதற்கு இந்நாட்டுச் சிறுவர்கள் உடந்தையாக இருப்பது கூடாது. வெகு காலம் தொடங்கிப் பரம்பரையாக அநுஷ்டானத்திலிருந்துவரும் தெய்வ ஆராதனையை ஒருவிநா டிப்பொழுதில் நிறுத்திவிடுவதாக முயலுவது தருமமேயில்லை. அதற்குச் சம்மதியாதீர்கள். தெய்வத்தைத் தொழுவதற் குப் பலவித மார்க்கங்கள் வேதங்களால் ஓதப்பட்டுள்ளன;

விக்ரகரூபம் தொழுவது அவற்றில் ஒன்றாகும். விக்ரஹ ஆராதனை யென்பது சர்வ சாமான்ய மனிதருக்கு மாத்திரம் ஏற்பட்ட தென்பது சரியில்லை. ஞானங் கரைகண்ட பெரியார்களும் விக்ரஹ ஆராதனை செய்திருக்கிறார்கள். ஆதி சங்கராசாரியார் சம்போ சங்கர பூஜைசெய்த விக்ரஹம் இன்றைக்கும் காப்பாற்றப்பட்டுப் பூஜிக்கப்பட்டு வருகிறது. சங்கரர் தோன்றிய இம் மாகாணத்தில் விக்ரஹத்தைத் தகர்ப்பதாகக் கூறுவது வேடிக்கையாக இருக்கிறது. தெய்வவிக்ரஹங்களை இடிப்பது கெட்ட காரியம். அச் செய்கைக்கு முற்போக்குள்ள கொடிய இயக்கத்தை முளையிலேயே தடுத்துவிடவேண்டும் என்றே நான் இவ்வளவு தூரம் பேசலானேன்.

ஒவ்வொருவரும் வாசிக்கவேண்டிய நூல்கள் எவை ?

ஸ்ரீராமாயணத்தின் சிறப்பு	0	1	0
கோயிலை இடிப்பதா? திருத்துவதா?	0	1	0
வேசிமக்கள் யார்?	0	1	0
கோயில் எதற்கு?	0	2	0
திருஞானசம்பந்தர் கொலை பாதகரா?	0	1	0

85685

சுயமரியாதை?

ஆஸ்திக சங்கத்தலைவர் சதாவதானம்
தெ. கிருஷ்ணசாமிப் பாவலர் இதன் ஆசிரியர்.

சுயமரியாதை என்று கூக்குரலிட்டுக்கொண்டு தமிழ் நாட்டில் இந்துமதத்தினருக்கும் சிறப்பாகப்பிராமணர் அல்லாதவர்களுக்கும் அவமரியாதையைத் தேடும்கூட்டத்தார், நமது அழியாது தொன்று தொட்டு வரும் பெருமைக்குக் காரணமாகிய சைவ வைணவ சமயங்களையும் சமயசாரியர்களையும்பற்றி அறியாமையால் வாய்க்கு வந்தபடி யெல்லாம் பிதற்றுகின்றனர். உண்மை இந்துக்களாகிய நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? உயிரினும் மதமே பெரிதென்று போரிட்ட நாடல்லவா இது? நமது தேசபந்து வாரப்பத்திரிகை அந்தக் கூட்டத்தார் பேசும்பேச்சுகளையும், வியாசங்களையும் எழுத்தெழுத்தாகக் கண்டித்து, அவர்கள் மெய்யறிவின்மையையும்விளக்கும். உடனே சந்தாதாராகச்சேர்ந்து வரவழைத்துப் படிப்பதுடன் பிறரையும் படிக்கச் சொல்லுங்கள். வருட சந்தா ரூ. 4.

"தேசபந்து" காரியாலயம், சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

ஸ்ரீ ஆதிமூலம் பிரஸ் சென்னை:—1929.

இனும் ! தமிழ் நூல் விலைப்பட்டி இனும் !!

புதிய சிறந்த தமிழ் நூல்கள்

ஸ்ரீ விவேகாநந்தர் நூல்கள்

	ரூ.	அ.
1004 உபதேசமொழிகள்	2	0
அருள் மொழிகள்	1	8
பக்தியோகம்	0	12
கர்மயோகம்	1	0
ராஜயோகம்	2	4
வேதாந்தரகசியம்	2	0
ஞானயோகரகசியம்	2	4
வேதாந்த நிலைமை	0	6
ஸ்ரீராமகிருஷ்ணப்ரஹ்மாநந்த சம்பாஷணை	3	0
ஸ்ரீராமதீர்த்தபரமஹம்ஸ விஜயம் 1-2பாகம்	5	0
அருணகிரிநாதர் சரித்ரம்	0	2
அகஸ்தியர் ரணவைத்யம்	0	12
சச்சிதாநந்த சிவம்	1	2
மோக்ஷசாதன ரகசியம்	4	0
வீரரத்ந பாஜி பிரபு	0	3

முருகன் புகழ் நூல்கள்

	ரூ.	அ.
திருமுருகாற்றுப்படை பரிமேலழகர் உரை	0	8
கந்தரந்தாதி மூலமும் வில்லிபுத்தூர் ஆழ்வார் உரையும் நூதன முறை	0	12
கந்தரநுபூதி உரையுடன்	0	8
ஷை விரிவுரை கிளேஸ்	0	12
கந்தர்சஷ்டி கவசம் உரை	0	8
ஷை விரிவுரை கிளேஸ்	0	12
கந்தர் கலிவெண்பா மூலமும் உரையும்	0	8
பிரதோஷ மகிமைவசனம்	0	4
விபூதி உருத்ராக்ஷ மகிமை	0	6

	ரூ.	அ.
மாதர்நீதி (5-ம் பதிப்பு)	1	0
ஷை பெதர்வெயிட்டு (கலி)	1	8
சோதிட ஆசிரியன் (212)	1	0
தர்ம வாசகம் 32	0	3
நாமாவளி கதம்பம்	0	8
தமிழ் நாடும் நம்மாழ்வாரும்	0	4
ஒரு பெண்ணரசியின் பிரஹ்ம ஞானோபதேசம் (வசனம்)	0	8
ஆநந்தராமாயணம் 109 சருக்கங்கள், 12,252 கிரந்தத் தொகை, 9 காண்டம், 13 படம்	6	0
கைவல்ய மூலம்	0	4
திரிகடுகம் விரிவுரையுடன்	0	6
நீதிநெறி விளக்கம் மூலமும், விருத்தியுரையும் ஆங்கில மொழி பெயர்ப்புடன்	1	8
ராமகிருஷ்ண வைபவம்	2	0
இந்து சங்கீதப் பாட்டுகள்	1	8
கணபதி ஷோடஸ நாம ப்ரதிபாத ஸ்லோக கணபதியின் அர்ச்சனைக்குரிய ஸுமுகாதி ஷோடஸநாமாவளி, ஸ்ரீ கணபதி அஷ்டோத்தரஸதநாமாவளி, ஸ்ரீ கணபதி ஸஹஸ்ரநாமாவளி, ஸ்ரீகணபதி சதுர்த்தீ பூஜாகல்பம் புதிய பதிப்பு(பாக்கெட் அளவு)	0	4

	ரூ.	அ.
மநுநீதி சதகம்	0	8
ஸ்யாமளா தண்டகம்	0	1
ஸ்ரீ ராமரட்சையின் மகிமை (ஸ்ரீ வால்மீகிமுனிவர்) குசன் என்னும் பாலனுக்கு இராம ரட்சையால் அபிமாந் திரணஞ் செய்தது)	0	3
ஸ்ரீ ராமகிருஷ்ண மகாத்மியம் ஸீதா மகாத்மியம், (இதில் விஷ்ணு எடுத்த பத்து அவதாரங்களிலும் இராமன் கிருஷ்ணன் என்னும் இரண்டு அவதாரங்களின மேன்மையைப் பற்றி இரண்டு பிராமணர்களுக்குள் நடந்த சம்பாஷணை	0	2
ஸ்தவராஜம் என்னும் சிவராம தோத்ரம் ஸீதா ராமதத்துவ சம்வாதமென்னும் ஸம்க்ஞாந பேடிகை அல்லது (மெய்ஞ்ஞான பெட்டி)	0	3
விநாயகர் மாலை, சுப்பிரமணியர் பரம்பரபதிகம், முருகர் அந்தாதி	0	3
ஒளவையார் விநாயகர் அகவல், கபிலதேவர் மூத்த நாயினுர் இரட்டை மணி மாலை, அருணகிரிநாதர், முத்தி விநாயகர்	0	2
முதுமொழி காஞ்சி உரை	0	6

	ரூ.	அ.
ஆதித்ய ஹ்ருதயம்	0	2
ஸ்ரீசுப்ரமண்யர் அஷ்டோத்தரசத நாமாவளி, சஹஸ்ர நாமாவளி	0	3
இலகு ராமாயணம், ஸ்ரீ ராம உபாசனுக்கிரமோபதேசம்	0	4
ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம	0	2
அபிராமியந்தாதி உரை	0	8
ஸ்ரீ லலிதா அஷ்டோத்சர, ஸஹஸ்ர நாமாவளி	0	3
ஸ்ரீ மீனுட்சியம்மை அக	0	1
வள்ளுவரும் மகளிரும்	0	2
ஸ்ரீராமாயணச் சிறப்பு	0	1
பிரம வித்தை	0	8
நீதி நெறி விளக்கம் உரை	0	8
,, ,, (கிளேஸ்)	0	12
அம்பிகாபதிக் கோவை	1	0
விஷ்ணு சகஸ்ர நாமாவளி	0	3
அஷ்டோத்தரசத நாமாவளி	0	5
திரிகால சந்தியாவந்தன மந்திரம்	0	6
ஸ்ரீராமாயணப் போராட்டம்	0	2
வேசி மக்கள் யார்?	0	1
கோயிலை இடிப்பதா? திருத்துவதா?	0	1
திருஞான சம்பந்தர் கொலைபாதகரா?	0	1
பெண்களா? பேய்களா?	0	1
இராமலிங்கவரோ இராமசாமியார்?	0	2
பாம்பு ஐயோ பாம்பு	0	2
ஆஸ்திக சங்க வெற்றி	0	1

ஸ்ரீ சாது இரத்தின சற்குரு புத்தகசாலை,

4/34, நயினியப்பநாயக்கன் வீதி, பார்க் டவுன், சென்னை.